<u>சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்</u>

**<u>OS.No. 1294 / 2022</u>**

**<u>and</u>**

**<u>OS.No.1367/2022</u>**

பி.வா.சா.1. சேனாதிபதி 20.02.2025

சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அசல் வழக்கு எண்.1367/2022-ன் 1, 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:

எனக்கு எழுதப்படிக்க தெரியும். பதிவு ஆவணங்களை படிக்க தெரியும். பதிவு ஆவணங்களையும் வில்லங்கசான்றையும் பரிசீலிக்க தெரியும் என்றால் வில்லங்கசான்றை நான் பார்க்க மாட்டேன். எந்த சொத்திற்கு சாட்சியம் அளிக்க வந்துள்ளேன என்றால் சிந்தலவாடிபட்டி கிராமம், சர்வே எண்.54/5, 54/6 ஆகிய புல எண்களுக்காக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். சர்வே எண்.54/6-க்கு 33 ஏர்ஸ், 54/5க்கு 36 ஏர்ஸ் ஆகும். இந்த சொத்துக்களுக்கு நான் 2017-ம் ஆண்டு வில்லங்கம் பார்த்தேன். எவ்வளவு வருடத்திற்கு பார்த்தேன் என்றால் 10 வருடங்களுக்கு வில்லங்கம் பார்த்தேன். உரிமையியல் நீதிமன்றம், உயர்நீதிமன்றம், வருவாய் நீதிமன்றம், பதிவுத்துறை தலைவர் அலுவலகம் ஆகியவற்றில் நான் 40 ஆண்டுகாளாமாக வழக்கு நடத்தி வருகிறேன் என்றால் சரியல்ல. 2017-ம் ஆண்டிற்கு பிறகு தான் வழக்கு நடத்தி வருகிறேன். நான் 1984-ம் வருடத்தில் இருந்து வழக்கு நடத்தி வருகிறேன். 40 ஆண்டுகளாக வழக்கு நடத்தி வருவதால் சிவில் நீதிமன்றத்திற்குண்டான ஆவணங்களை எப்படி பெறுவது, எப்படி தாக்கல் செய்வது போன்றவைகள் தெரியும் என்றால் எனக்கு தெரியாது. வாதிகள் என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றும் என்ன ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளார்கள் என்றும் எனது தரப்பில் என்ன ஆவணங்கள் தாக்கல் செய்து என்ன எதிர்வாதம் செய்து வருகிறேன் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அ.வ.எண்.1367/2022 வழக்கின் விபரங்கள் எனக்கு தெரியும். எனது அம்மா பெயர் யசோதையம்மாள். எனது அம்மா இறக்கும் வரை என்னுடன் சுமுகமாக தான் இருந்து வந்தார் என்றால் சரிதான். சொத்து சம்மந்தமாக எனது அம்மா எழுதிக் கொடுத்த ஆவணங்களின் விபரங்கள் பற்றி எனக்கு தெரியும் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள கையெழுத்து எனது தாயாரின் கையெழுத்து தான். என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள விபரத்தை படித்து பார்த்து தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். அந்த ஆவணம் பி.வா.சா.ஆ.16. பி.வா.சா.ஆ.16 ஆவணத்தில் எனது தாயார் எனது மாமா ராமசந்திரனுக்கு எழுதிக் கொடுத்த பொதுபாக பாத்திய விடுதலை பத்திரம் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் எனது மாமா ராமசந்திரகவுண்டர், எனது தாயார் யசோதையம்மாள், எனது சித்தி மகன் மணி, மற்றொரு சித்தியின் மகன் கனகராஜ் ஆகியோர்கள் சேர்ந்து குடும்ப சொத்துக்களை பொறுத்தது குடும்ப ஏற்பாட்டு ஆவணங்களை எழுதிக் கொண்டார்கள் என்றால் அது பற்றி

எனக்கு தெரியாது. ஆனால் அந்த ஆவணம் வெள்ளைத்தாளில் எழுதப்பட்டது. அதனால் அதில் உள்ள கையெழுத்து எனது அம்மாவின் கையெழுத்து போல் உள்ளது. இந்த ஆவணம் எனது தாயாரால் எழுதிக் கொடுக்கப்பட்டது என்றும் எனது தாயாரின் கையெழுத்து தான் என்றும் வழக்கிற்காக இந்த ஆவணத்தை நான் மறுக்கிறேன் என்றால் சரியல்ல. எனத அம்மாவும் எனது சித்தியின் மகன்களும் எனது மாமா ராமசந்திரகவுண்டருக்கும் மற்றொரு மாமா தியாகராஜனுக்கும் 5 பேரும் சேர்ந்து குடும்ப ஏற்பாட்டாக சொத்தை எழுதிக் கொடுத்தார்களா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. ராமசந்திரன் வாரிசுகளையோ, நல்லம்மாள் வாரிசுகளையோ அல்லது நாச்சம்மாள் வாரிசுகளையோ விசாரிப்பதற்கு எனக்கு ஆட்சேபனை இல்லை என்றால் சரிதான். செம்பாகவுண்டருக்கு 5 பேர் வாரிசுகள். நாச்சம்மாள், நல்லம்மாள், ராமசந்திரன், யசோதையம்மாள், தியாகராஜன் ஆகியோர்கள் வாரிசுகள் ஆவார்கள். எனது அம்மா யசோதையம்மாளுக்கு ராசாத்தி, சுலோக்சனா, சேனாதிபதி, குணசேகரன், தமிழ்செல்வி ஆகியோர்கள் வாரிசுகள். யசோதையம்மாளின் வாரிசுகள் அனைவருக்கும் யசோதைம்மாளின் சொத்தில் பாகம் உள்ளதா என்றால் இல்லை. தாவா சொத்து எங்களுக்கு எப்படி பாத்தியப்பட்டது என்று எதிர்வாதம் தாக்கல் செய்து வழக்கை நடத்தி வருகிறோம் என்றால் எங்களுக்கு பூர்விக பாத்தியம் என்று குறிப்பிட்டு தான் வழக்கு நடத்தி வருகிறோம். தாவா சொத்து பூர்விக சொத்து என்பதற்கு எந்த மூல ஆவணமும் எங்களிடம் இல்லை என்றால் உள்ளது. தாவா சொத்து பூர்விக வழியில் பாத்தியப்பட்டதற்கு கிரைய ஆவணங்கள் எதுவும் உள்ளதா என்றால் இல்லை. பட்டா உள்ளது. அந்த சொத்தை ஈடு வைக்கப்பட்ட பத்திரமும் உள்ளது. சர்வே எண்.54-ன் ஆதியில் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 18 ஏக்கர் 22 செண்ட். 18 ஏக்கர் 22 செண்ட் எனக்கு பூர்விக சொத்தா என்றால் எனக்கு 3 குழி மட்டும் தான். மற்ற சொத்துக்கள் எல்லாம் சிவகிரி பழனிச்சாமிகவுண்டருக்கு பாத்தியப்பட்டது. சிவகிரி பழனிச்சாமி கவுண்டர் எந்த வருடம் யாருக்கு தானசெட்டில்மெண்ட் பத்திரம் எழுதிக் கொடுத்தார் என்றால் 1955-ம் ஆண்டு சிவகிரி பழனிச்சாமி, செம்பாகவுண்டர், தியாகராஜன், ராமச்சந்திரன் சேர்ந்து பெரியபழனியம்மாள் என்பவருக்கு செட்டில்மெண்ட் எழுதிக் கொடுத்தார்கள். அந்த செட்டில்மெண்ட் ஆவணம் பற்றி எனக்கு தெரியும் என்றால் தெரியும். அந்த செட்டில்மெண்ட் ஆவணத்தில் என்ன எழுதியிருக்கிறது என்று எனக்கு தெரியாது. அந்த செட்டில்மெண்ட் ஆவணத்தில் சிவகிரி பழனிச்சாமி, செம்பாகவுண்டர், தியாகராஜன், ராமச்சந்திரன் ஆகியோர்களுக்கு பாத்தியப்பட்ட பூர்விக சொத்தான சர்வே எண்.54-ல் 3 குழி நிலத்தை மட்டும் அவரது கைவசம் வைத்துக் கொண்டு மீத சொத்தை பெரியபழனியம்மாளுக்கு செட்டில்மெண்ட் எழுதிக் கொடுத்துள்ளார்கள் என்றால் சரியல்ல. 3 குழி நிலம் பழனி ரோட்டின் அருகில் தென்புறத்தில் உள்ளது என்றால் சரிதான். 3 குழி நிலத்தில் தான் சிவகிரி பழனிச்சாமி அவர்கள் முன்னோர்கள் காலத்தில் இருந்து பழனி

பாதயாத்திரை செல்லும் பக்தர்களுக்கு குடிநீர் வசதி, உணவு வசதி செய்து வந்தார் என்றால் சரியல்ல. புளிமரத்து அடியில் சிறியதாக தென்டெடுத்து 3 மாத்திற்குள் உணவு கொடுப்பார். ஆனால் சொத்திற்குள் போகமாட்டார். சிவகிரி பழனிச்சாமியும் அவரது சகோதரர்களும் இந்த 3 குழி நிலத்தை பழனி பாதயாத்திரை செல்லும் பக்தர்களுக்கு தண்ணீர், சாப்பாடு போன்ற வசதிகளை செய்வதற்காக இந்த 3 குழி நிலத்தை ஒதுக்கி கொண்டு மீத சொத்தை சகோதரி பழனியம்மாளுக்கு கொடுத்தார்கள் என்றால் சரியல்ல. தாவா சொத்து பூர்விக சொத்து என வழக்காடும் நான் சொத்தினை சிவகிரி பழனிச்சாமி வகையறாக்கள் அவரது சகோதரி பழனியம்மாளுக்கு தானசெட்டில்மெண்ட் எழுதிக் கொடுத்ததை நானோ எனது தந்தையோ எனது தாத்தாவோ ஆட்சேபனை செய்து வழக்கு எதுவும் தாக்கல் செய்துள்ளோமா என்றால் தாக்கல் செய்யவில்லை. 28 குழி நிலமும் எங்களுக்கு எந்த வகையிலும் பாத்தியமில்லை என்றால் சரியல்ல. 28 குழியில் 3 குழி போக மீத 25 குழி நிலத்தை சிவகிரி பழனிச்சாமி வகையறாக்கள் பெரியபழனியம்மாளுக்கு தானசெட்டில்மெண்ட்டாக கொடுத்ததை எனது தாயார் யசோதையம்மாளும் நானும் நீலவரதப்பநாயக்கருக்கு கிரையம் செய்து கொடுத்தோம் என்றால் சரிதான். ஆனால் நான்குமால் தவறு. பத்திரம் எழுதும் பொழுதே நான்குமால் தவறாக தான் குறிப்பிட்டு எழுதிக் கொடுத்தோம் என்றால் மேற்படி கிரைய ஆவணத்தில் என்ன எழுதியிருக்கிறது என்று தெரியாமலே கையெழுத்து செய்து கொடுத்துள்ளேன். நாங்கள் நீலவரதப்பநாயக்கருக்கு எழுதிக் கொடுத்த கிரய ஆவணத்தில் எனது மாமா ராமசந்திரகவுண்டர் முன்னின்று கிரையம் செய்து கொடுத்தார் என்று எழுதப்பட்டுள்ளதா என்றால் எழுதப்படவில்லை. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.7 முதல் 9 ஆவணங்களை நான் படித்து பார்த்து கையெழுத்து செய்யவில்லை என்றால் சரியல்ல. படித்து பார்த்துதான் கையெழுத்து செய்தேன். நீலவரதப்பகவுண்டருக்கு எழுதிக் கொடுத்த கிரைய ஆவணத்தை மட்டும் படித்து பார்க்காமல் கையெழுத் செய்துவிட்டேன் என்றால் சரிதான். நாங்கள் நீலவரதப்பநாயக்கருக்கு எழுதிக் கொடுத்த கிரைய ஆவணத்தில் நான்குமால் தவறு என்று 1985-ல் தான் எங்களுக்கு தெரிய வந்தது. 1985-க்கு பிறகு அந்த ஆவணத்தை திருத்தம் செய்வதற்கு நான் நடவடிக்கை எடுத்தேனா என்றால் இல்லை. திருத்தல் பத்திரம் பதிவு செய்தோமா என்றால் இல்லை. நீலவரதப்பநாயக்கருக்கு எழுதிக் கொடுத்த கிரைய பத்திரத்தில் நான்குமாலில் கிழக்கு மாலாக சிவகிரிபழனிச்சாமிக்கு பாத்தியப்பட்ட 3 குழி நிலம் எல்லையாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் அது தவறு. ராமசாமிகவுண்டரின் வாரிசுகளான சிவகிரி பழனிச்சாமி, செம்பாகவுண்டர் வகையாறக்கள் அவர்களுக்கு பாத்தியப்பட்ட குடும்ப சொத்துக்களை பொறுத்து செய்து கொண்ட பரிமாற்றங்கள் குறித்து தெரியுமா என்றால் 1985-ல் ராமசாமி, ராமசந்திரன், தியாகராஜன் ஆகியோர்கள் பொய்யாக பத்திரம் எழுதிக் கொண்டார்கள் என்று தான்

தெரியும். மற்ற பரிமாற்றங்கள் எனக்கு தெரியாது. எனது தாத்தா செம்பாகவுண்டரின் தகப்பனார் ராமசாமிகவுண்டருக்கு 400 குழி நிலம் இருக்கும் என்றால் சரிதான். 400 குழி நிலத்தையும் அவரது வாரிசுகள் எவ்வாறு பாகம் பிரித்துக் கொண்டார்கள் என்றோ என்ன பரிமாற்றம் செய்து கொண்டார்கள் என்றோ எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரிதான். எனது தாத்தா குப்பமுத்துகவுண்டருக்கு சொத்துக்கள் ஏதாவது இருந்ததா என்றால் எனக்கு தெரிய இல்லை. எனது தந்தை ராமசாமி சொத்து எதுவும் கிரையம் வாங்கவில்லை. நானோ, எனது சகோதரர் குணசேகரனோ சொத்து எதையும் வாங்கவில்லை என்றால் சரிதான். நான் பிறந்தது முதல் எனது தாயார் காலத்தில் இருந்து எனக்கு எந்த சொத்து இல்லை என்றும் என்னையும் எனது குடும்பத்தையும் பராமரித்தது செம்பாகவுண்டர் என்றால் சரியல்ல. எனக்கு பூர்விக சொத்தில் எந்த வித உரிமை கிடையாது என்றும் அதனால் எனக்கு தாவா சொத்தில் எந்த பாத்தியம் இல்ல என்றால் சரியல்ல. தாவா சொத்தான 1 ஏக்கர் 80 செண்ட்டில் செம்பாகவுண்டருக்கு 90 செண்ட்டும், சிவகிரி பழனிச்சாமிக்கு 90 செண்ட்டும் உள்ளது என்றால் சரியல்ல.

(அசல் வழக்கு எண்.1367/2022-ன் 1, 2 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கினங்க குறுக்கு விசாரணையின் தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.)

M DHANABAL

Digitally signed by M DHANABAL
Date: 2025.02.21 17:54:42 +0530

சார்பு நீதிபதி

ஒட்டன்சத்திரம்